**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**OS – 135/2020**

நாள் 10.06.2025

PW1 – பாப்பாத்தி

க/பெ – ரங்கசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of June 2025.)**

**6–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனக்கு 62 வயதாகிறது. நான் பிறந்த வருடம் எனக்கு ஞாபகமில்லை. 1–ம் பிரதிவாதி சுப்பிரமணி எனது மூத்த சகோதரர். இறந்துபோன ரங்கசாமி எனது தம்பி. எனது பெரிய மகள் நாகரத்தினத்திற்கு 40 வயது இருக்கும். எனது இளைய மகளுக்கு 37 வயது இருக்கும். எனது மகனுக்கு 33 வயது இருக்கும். எனக்கு திருமணம் நடந்து ஒரு வருடம் கழித்து எனது பெரிய மகள் பிறந்தார். எனக்கு சுமார் 1983–ம் ஆண்டு வாக்கில் திருமணம் நடந்திருக்கும் என்றால் சரிதான். எனது மகன் சந்தோஷ்க்கு இறந்து போன எனது தம்பி ரங்கசாமியின் மகளான 4–ம் பிரதிவாதி ரஞ்சனியை திருமணம் செய்து வைத்துள்ளேன். 4–ம் பிரதிவாதியின் தம்பி தான் 5–ம் பிரதிவாதி. அந்த 5–ம் பிரதிவாதி என்னுடன் இன்று வந்துள்ளார் என்றால் என்னுடன் வரவில்லை, ஆனால் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். ஒவ்வொரு வாய்தாவிற்கும் 5–ம் பிரதிவாதி என்னுடன் வருவார் என்றால் இல்லை. நான் மட்டும் தான் எனது வழக்கிற்காக ஆஜராக வந்து செல்வேன். 5–ம் பிரதிவாதியை நான் அழைத்து வரமாட்டேன்.

2. 1 முதல் 5 பிரதிவாதிகள் இந்த வழக்கில் என்ன எதிர்வாதம் செய்து பதில் போட்டுள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால்

எனக்குத் தெரியாது. எனது அப்பா பெயர் பழனிச்சாமி கவுண்டர். எனது அப்பாவின் அப்பா பெயர் ரங்கசாமி கவுண்டர். எனது அப்பா பழனிச்சாமி கவுண்டர் எனது அண்ணன் 1–ம் பிரதிவாதி பராமரிப்பில் தான் இருந்து வந்தார் என்றால் சரிதான், எனது வீட்டிலும் 10 நாள் வந்து தங்கி விட்டு செல்வார். எனது அப்பாவிற்கு ஒரு கை, ஒரு கால் முழுவதும் செயலிழந்த நிலையில் அதற்கு கோயமுத்தூர் ராமகிருஷ்ணா மருத்துமனைக்கு அழைத்துச் சென்று மருத்துவம் பார்த்தேன். அது சம்பந்தப்பட்ட மருத்துவ ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது பொய் என்றும், எனது அப்பா நல்ல நிலையில் தான் இருந்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. சுப்பராய கவுண்டருக்கு கிரையம் கொடுத்த சொத்து போக மற்ற சொத்துக்களை 1–ம் பிரதிவாதியும், அவரது சகோதரர் இறந்து போன ரங்கசாமி குடும்பத்தாரும் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நானும் தான் சென்று பயிர் செய்து விட்டு வருகிறேன். நானும், பயிர் செய்து வருகிறேன் என்பதை காட்ட ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. எனது கணவர் பெயர் ரங்கசாமி. எனது மாமனார் பெயர் கொண்டத்து கவுண்டர் ஆகும். கதவு எண்.1/153, அய்யம்பாளையம், கணக்கம்பாளையம் கிராமம் என்பது எங்களது விலாசம் என்றால் சரிதான். 01.03.2004–ம் தேதியிட்ட உயில்சாசனம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது, அது பதிவு செய்த விபரமும் எனக்குத் தெரியாது. அந்த உயில் சாசனம் பற்றி 2020–ம் ஆண்டில் தான் எனக்கு தெரிய வந்தது. எனது அப்பா இறந்த பிறகு சொத்து சம்பந்தமாக நான் 1–ம் பிரதிவாதியிடம் பேசிய போது தான் மேற்படி உயில் பற்றிய விபரம் எனக்கு தெரிய வந்தது. அப்போது எனக்கு தெரியாமல் உயில் எழுதிக்கொண்டதாக 1–ம் பிரதிவாதி

சுப்பிரமணியம் என்னிடம் சொன்னார். எனது கணவர் ரங்கசாமி அந்த உயில் சாசனத்தில் சாட்சியாக  கையொப்பம் போட்டுள்ள விபரத்தை என்னிடம் எப்போது சொன்னார் என்றால் அவர் சாட்சி கையொப்பம் போடவில்லை. நானும், எனது கணவரும் ஒன்றாக தான் வசித்து வருகிறோம். நான் உயிலை நகல் எடுத்து பார்த்த போது எனது கணவர் ரங்கசாமி சாட்சியாக கையொப்பம் செய்துள்ள விபரம் தெரிந்து அவரிடம் அது குறித்து கேட்டேனா என்றால், கேட்டேன் அவர் சாட்சி கையொப்பமே செய்யவில்லை என்று சொன்னார். எனது கணவர் திருமணத்திற்கு முன்பு ஒரு கம்பெனி வைத்து நடத்தி வந்தார். திருமணத்திற்கு பிறகு வேறு ஒரு கம்பெனியில் வேலை பார்த்து வந்தார். தற்போது விவசாயம் செய்து வருகிறார். எனது கணவர் 10–ம் வகுப்பு வரை படித்துள்ளார். எனது கணவர் கே. ரங்கசாமி என்று தான் கையொப்பம் செய்வார் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. எனது கணவர் சாட்சி கையொப்பமே செய்யவில்லை என்று என்னிடம் சொல்லி விட்ட நிலையில் உயில் ஆவணத்தில், எனது கணவர் பெயர் சாட்சியாக உள்ள நிலையில் அவருடைய கையொப்பத்தை வேறு யாரோ ஆள் மாறாட்டம் செய்து கையொப்பம் செய்துள்ளார் என்பது குறித்து 1–ம் பிரதிவாதி மீது புகார் ஏதேனும் கொடுத்தோமா? என்றால் இல்லை. நான் சொல்வது பொய் என்றும், எனது கணவர் தான் உயில் சாசனத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றும், அதனால் தான் எந்தவொரு புகாரும் அவர் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதேபோல், சார்பதிவாளர் அலுவலகத்தின் உள்ளே வைத்து எனது அப்பாவை அடையாளம் காட்டும் வகையில் இன்னாரென்று நிரூபித்தவர் என்ற இடத்திலும் உயில் சாசனத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

4. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக நானும், 1—ம் பிரதிவாதியும் நல்ல சுமூகமான உறவு முறையில் தான் இருந்தோம். எனது அப்பா பழனிச்சாமி கவுண்டர் எப்போதும் கைரேகை தான் வைப்பார் என்றால் சரிதான். அந்த உயில் சாசனத்தில் சர்க்கார் பெரியாபாளையம் கிராமம், கதவு எண்.3/282 விலாசத்தைச் சேர்ந்த கருப்ப பண்ணாடி மகன் அருணாச்சலம் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் அது எனக்குத் தெரியாது. அந்த அருணாச்சலம் என்பவரை நான் சந்திக்கவும் இல்லை, உயில் பற்றி விசாரிக்கவும் இல்லை. 01.03.2004—ம் தேதியிட்ட உயில் சாசனத்தை எழுதி பதிவு செய்யும் போது நானும், எனது கணவர் ரங்கசாமியும் சென்று உடனிருந்து பதிவு செய்தோம் என்றும் அதனால் அந்த உயில் சாசனம் ஏற்ட்ட தேதி முதலே அது பற்றிய விபரம் எனக்கு தெரியும் என்றும், இருந்து இந்த வழக்கிற்காக வேண்டி உயில் சாசனம் பற்றி எனக்குத் தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. 1—ம் பிரதிவாதியும், அவரது குடும்பத்தாரும் மற்றும் இறந்துபோன சகோதரர் ரங்கசாமியின் குடும்பத்தாரும் சேர்ந்து 03.11.2005—ம் தேதியில் பதிவு பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பற்றிய விபரம் எனக்குத் தெரியவில்லை. ஆனால், அதற்கு பின்னிட்டு தான் பாகம் பிரித்து கொண்ட விபரம் எனக்குத் தெரிய வந்தது. அந்த பாகப்பிரிவினைக்கு முன்பாகவே எனது அப்பா பழனிச்சாமி கவுண்டர் இறந்து போய்விட்டார் என்றால் சரிதான். 6—ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தை கம்பிவேலி போட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்தை 6—ம் பிரதிவாதி தான் சுவாதீன அனுபவத்தில் வைத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். அந்த கிரையம் பெற்ற

சொத்துக்கு மேல்புறத்தில் 6–ம் பிரதிவாதிக்கு வேறு சொத்துக்கள் இருக்கிறது என்றால் சரிதான். தாவா சொத்தைப் பொறுத்து 7–ம் பிரதிவாதி பெயரில் எந்தவொரு ஆவணமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். அதனால், 7–ம் பிரதிவாதி இந்த வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 இறப்புச் சான்றிதழில் எனது அப்பா பெயர் பழனிச்சாமி என்றும், எனது தாத்தா பெயர் ரங்கசாமி என்றும் தான் உள்ளது என்றும் கவுண்டர் என்ற பெயர் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். எனது அப்பா பழனிச்சாமி கவுண்டரின் விலாசம் கதவு எண்.64, சர்க்கார் பெரியாபாளையம், பெருந்துறை வட்டம் என்பது தான் முகவரி என்றால் சரிதான். வா.சா.ஆ.1 இறப்புச் சான்றானது எனது அப்பாவிற்குரிய இறப்புச் சான்று என்றால் சரியல்ல. எனது அப்பா பழனிச்சாமி கவுண்டர் பாகப்பிரிவினை 03.11.2005–ம் தேதியில் பாகப்பிரிவினை ஏற்படுவதற்கு முன்பாகவே இறந்து போய்விட்டதாக நான் சொல்லியுள்ள நிலையில் வா.சா.ஆ.1–ல் எனது அப்பாவின் இறப்பு தேதியானது 21.08.2007–ம் தேதியில் இறந்ததாக தான் கண்டுள்ளது என்றால் சரிதான். அதனால், இந்த இறப்புச் சான்று எனது அப்பாவின் உடையது கிடையாது என்றால் சரியல்ல. எனது அப்பா 01.03.2004–ம் தேதியில் உயில் எழுதி வைத்துள்ள விபரமும், எனது அப்பா அதற்கு பிறகு இறந்து போன விபரமும் 03.11.2005–ம் தேதியிட்ட பதிவு பாகப்பிரிவினை பத்திரத்தில் வாசகங்கள் கண்டுள்ளது என்றால் அது எனக்குத் தெரியாது. அது பற்றிய விபரத்தை 6–ம் பிரதிவாதி தனது எதிர்வழக்குரையிலும் குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் நான் அதை படித்து பார்க்கவில்லை.

6. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 இறப்புச் சான்றிதழில் கண்டபடி எனது அப்பா 2007–ல் இறந்திருந்தால் 03.11.2005–ம் தேதியிட்ட

பாகப்பிரிவினை பற்றிய விபரம் கண்டிப்பாக அவருக்கு தெரிய வந்திருக்கும் என்றும், அந்த பத்திரத்தில் எனது அப்பாவின் இறந்து விட்டதாக காட்டியுள்ளது குறித்து எனது அப்பா உரிய நடவடிக்கை எடுத்திருப்பார் என்றும், எனது அப்பா 2005–ம் ஆண்டிற்கு முன்பாவே இறந்து போய்விட்டதால்தான், அது குறித்து எனது அப்பா எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 03.11.2005–ம் தேதியில் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்ட தேதியிலேயே 1–ம் பிரதிவாதி அவருக்கு பாகமாக வந்த தாவா சொத்தின் ஒரு பகுதியை 6–ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரிதான், அது குறித்த விபரம் எனக்கு பின்னிட்டு தான் தெரிய வந்தது. 6–ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்திற்கு அவரது பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டு கம்பி வேலி அமைத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான், எங்களுக்கு வேறு சொத்துக்களுக்கு உள்ளே செல்ல வழி விட்டுள்ளார். எனது அப்பா 2005 ல் உயிரோடு இருந்திருந்தால் 6–ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்ததை பற்றியும், பட்டா மாற்றம் செய்தது பற்றியும் கம்பி வேலி போட்டது பற்றியும் கேட்டு நடவடிக்கை எடுத்திருப்பார் என்றும், அதனால் எனது அப்பா 2007–ல் இறந்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. 6–ம் பிரதிவாதி என்னையும், எனது அண்ணன் 1–ம் பிரதிவாதியையும் கேட்டு தான் கம்பி வேலி போட்டார். பாகப்பிரிவினை பத்திரத்தில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ள சண்முகசுந்தரம், நாச்சிமுத்து என்பவர்களை எனக்குத் தெரியாது. எனது அப்பா பழனிச்சாமி கவுண்டர் உயிரோடு இருக்கும் காலத்திலேயே இறந்து போய்விட்டதாக தெரிவித்து 03.11.2005–ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை மோசடியாக ஏற்படுத்திக்கொண்டது சம்பந்தமாக 1–ம் பிரதிவாதி மீது, இறந்து போன

ரங்கசாமி குடும்பத்தார் மீதும் காவல் துறையில் புகார் கொடுத்து நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா? என்றால் இல்லை. அந்த 03.11.2005–ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் உண்மையானது, அதில் உள்ள வாசகங்களும் உண்மையானது என்பதால் தான் நான் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

7. எனது அப்பா பழனிச்சாமி கவுண்டர் 01.03.2004–ம் தேதியிட்ட உயில் சாசனத்தை எழுதி வைக்கவும் இல்லை, அதற்காக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவும் இல்லை, உயில் சாசனத்தில் உள்ள கைரேகைகள் எனது அப்பாவினுடையது கிடையாது என்று சொல்லி தான் வாதமாக வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பா நான் சிறுவயதாக இருந்த போது ஒரு சொத்தை எனது பங்காளிக்கு பதிவு கிரையம் கொடுத்துள்ளார். அந்த பதிவு கிரைய பத்திரத்தில் உள்ள எனது அப்பாவின் கைரேகையையும், பதிவு உயில் சாசனத்தில் உள்ள எனது அப்பாவின் கைரேகையையும் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெற்று ஆய்விற்கு அனுப்பி ஆய்வு செய்து அறிக்கை பெறுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்கள் பற்றி எனக்குத் தெரியும். 6–ம் பிரதிவாதி 1–ம் பிரதிவாதி மூலம் சொத்தை 03.11.2005–ம் தேதியில் கிரையம் பெற்று என்னையும், 1–ம் பிரதிவாதியையும் கேட்டு அவர் வாங்கிய சொத்தை கம்பிவேலி அமைத்துள்ள நிலையில் அந்த கிரைய பத்திரத்திற்கு எதிராக அப்போதே ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சொத்து பாதுகாப்பாக இருப்பதற்கு கேட்டார்கள் அதற்காக விட்டு விட்டேன். எனது அப்பா எழுதி வைத்த உயில் சாசனமும், எனது அப்பா இறந்த பிறகு ஏற்பட்ட 03.11.2005–ம் தேதியிட்ட பதிவு பாகப்பபிரவினை பத்திரமும்

மற்றும் 6–ம்பிரதிவாதி பெயரில் 1–ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த 03.11.2005–ம் தேதியிட்ட பதிவு கிரைய பத்திரமும் பற்றிய விபரங்கள் எனக்கு 2005–ம் ஆண்டுவாக்கிலேயே தெரியவந்து விட்டுள்ள நிலையில் 2008–ம் ஆண்டிற்குள்ளாக வழக்கை தாக்கல் செய்யாமல் காலம் கடந்து நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு கால வரையறைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதனால், தாவா சொத்தில் எனக்கு எவ்வித பாக பாத்திய உரிமையும் கிடையாது என்றும், இந்த நிலையில் தாவா சொத்தைப் பொறுத்து எவ்வித விளம்புகை பரிகாரமும் பாகப்பிரிவினை பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்ற சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்தில் கூட்டுச்சுவாதீன அனுபவத்தில் இல்லாத நிலையில் நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணமும் தவறானது என்று சொன்னால் சரியல்ல. 6–ம் பிரதிவாதிக்கு 1–ம் பிரதிவாதியின் பங்கு சொத்தையும், உயில் படி வந்த சொத்தையும் 1–ம் பிரதிவாதி கிரையம் கொடுத்து விட்டார், ஆனால் இறந்து போன ரங்கசாமியின் பாக சொத்து மட்டும் கிரையம் கொடுக்காமல் இருந்து வருகிறது என்றால் சரிதான். ரங்கசாமியின் பாக சொத்தையும், 6–ம் பிரதிவாதிக்கே கிரையம் கொடுத்து விடுவதாக வழக்குக்கு முன்பாக பேச்சுவார்த்தை நடந்து வந்தது என்றால் இல்லை. ரங்கசாமியின் பாக சொத்தை பொறுத்து விலை பேசிய போது, அதிக விலை கேட்டதின் விளைவாக பிரச்சனை ஏற்பட்டு விட்டது என்றும், அதனால் தான் ரங்கசாமி குடும்பத்தார் என்னை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. ரங்கசாமியின் மகன் பூபதியான 5–ம் பிரதிவாதி தான் பேசி இருப்பார், ஆனால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. 1 முதல் 5 பிரதிவாதிகளின் தூண்டுதலின் பேரில் தான் நான்

வந்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதனால் தான் 1 முதல் 5 பிரதிவாதிகள் வழக்கு நடத்த வராமல் ஒருதலை பட்ச உத்தரவிற்கு உள்ளாகி உள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. 6–ம் பிரதிவாதி உரிய தொகையை கொடுத்து நல்லெண்ணத்தின் பேரில் கிரையம் பெற்று கம்பிவேலி அமைத்து அனுபவித்து வருகிறார் என்றும், அதனால், அந்த கிரைய ஆவணத்திற்கு எதிரகா விளம்புகை பரிகாரம் கேட்க எனக்கு தகுதி கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அதனால் தாவாவில் கோரிய பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்பதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**7–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

6–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை 7–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்கிறார்.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.06.10 15:29:10 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**